

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) சென்னை, ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற விழாவில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னத திட்டத்தின் கீழ் தூய்மைப் பணியாளர்களுக்கு 213 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்கிடும் முதற்கட்டமாக 100 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன், மேயர் திருமதி ஆர். பிரியா, கு.செல்வப்பெருந்தகை, இ.பரந்தாமன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார். தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர். தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் செ.சரவணன், தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்க நிறுவனர் / தலைவர் முனைவர் மிலிந்த் காம்ப்ளே, தேசிய தலைவர் ரவிக்குமார் நர்ரா, தென் இந்திய தலைவர் சௌந்தர் ராஜன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, 5.12.2024 அன்று சென்னை – குறிஞ்சி இல்லத்தில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., தமது பிறந்தநாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# சாமானியரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதுதான், ‘திராவிட மாடல்’ அரசின் லட்சியம்!

## இராணிப்பேட்டையில் – அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**இராணிப்பேட்டை, டிச.8-**

**இராணிப்பேட்டையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் வகையில், நடைபெற்ற விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றுகையில், “சாமானியரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதுதான் திராவிட மாடல் அரசின் லட்சியம்” என்று குறிப்பிட்டார்.**

விழாவில், ரூ.19.21 கோடி மதிப்பில் 13 புதிய அரசு பள்ளிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.9.15 கோடி மதிப்பில் முடிவுற்ற 28 திட்டப் பணிகளைத் திறந்து வைத்தார்.

மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 2,229 பேருக்கு ரூ.17.98 கோடி மதிப்பில் வங்கிக்கடன் இணைப்பு, 700 பேருக்கு ரூ.8.12 கோடி மதிப்பில் வீட்டு மனை பட்டாக்கள், 227 தூய்மைக் காவலர்களுக்கு ரூ.6.81 லட்சம் மதிப்பில் பாதுகாப்பு உபகரணங்கள், 50 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.50 லட்சம் மதிப்பில் செயற்கைக் கால்கள், இரு சக்கர வாகனம் மற்றும் வீல் சேர்கள் வழங்கினார்.

இவ்வாறாகப் பல்வேறு துறைகளின் சார்பில், மொத்தம் 7,165 பயனாளிகளுக்கு ரூ.37.79 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் அவர்கள் வழங்கி பேசியதாவது :-

இன்றைக்கு, சட்டமேதை அண்ணல் அம்பேத்கரின் நினைவு நாளை முன்னிட்டு, அவரின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்திவிட்டு, இந்தச் சிறப்பான நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

அண்ணல் அம்பேத்கர் வலியுறுத்தியபடி, எல்லாத் தரப்பு மக்களுக்குமான அரசாக நம் திராவிட மாடல் அரசு இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

### கழிவுநீர் அகற்றும் இயந்திரங்கள்

இன்றைய தினம் சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சியில் முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களைத் தொழில்முனைவோராக ஆக்குகின்ற வகையில், தமிழ்நாடு அரசின் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 100 தூய்மைப் பணியாளர்களுக்குக் கழிவுநீர் அகற்றும் இயந்திரங்களை மானியத்தோடு வழங்கி இருக்கிறார்.

தமிழ்நாடு எங்கும் எல்லா மாவட்டங்களிலும், எல்லா அமைச்சர்களும் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி இருக்கிறார்கள். அந்த வகையில், இன்றைக்கு இந்த நிகழ்ச்சியிலும் 230 தூய்மைப் பணியாளர்களுக்கு 700 பாதுகாப்பு உபகரணங்களை நாம் இங்கு வழங்க இருக்கிறோம்.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாநகராட்சியையும், நகராட்சியையும், ஊராட்சியையுயும் அழகாகப் பராமரிக்கின்ற தூய்மைப் பணியாளர்களின் வாழ்க்கையை அழகாக்க, நம் திராவிட மாடல் அரசு என்றைக்கும் துணை நிற்கும்.

### கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்

இன்றைக்கு இராணிபேட்டை மாவட்டத்தில் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை 364 ஊராட்சிகளுக்குக் கொடுக்கிறோம். 7 ஆயிரத்து 200 பயனாளிகளுக்கான 38 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டப் பொருள்களையும் நாங்கள் வழங்க இருக்கிறோம்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.12.2024) இராணிப்பேட்டை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற விழாவில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல். ஈஸ்வரப்பன், ஏ.எம். முனிரத்தினம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு. சந்திரகலா மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இராணிப்பேட்டை மாவட்டத்திற்குப் பலமுறை வந்து இருக்கிறேன். கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராக வந்து இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினராக வந்து இருக்கிறேன். விளையாட்டுத்துறை அமைச்சராக வந்து இருக்கிறேன். ஆனால், இன்றைக்கு முதன்முறையாகத் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்று உங்களின் வாழ்த்துகளை எல்லாம் பெற வந்து இருக்கிறேன்.

உங்களுக்குத் தெரியும் மூன்று நாட்களுக்கு முன்பு, `ஃபெஞ்சல் புயல்’ கனமழை காரணமாக, தமிழ்நாட்டின் வட மாவட்டங்கள் உட்படப் பல மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஆனால், தமிழ்நாடு அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் உயிர் இழப்புகள் தடுக்கப்பட்டு, சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

அதனால்தான், இந்த நிகழ்ச்சி இவ்வளவு மகிழ்ச்சியோடு, சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது.

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கின்ற நம் ராணிப்பேட்டை மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும், விளையாட்டு மேம்பாட்டுத் துறை, ஊரக வாழ்வாதார இயக்கம் உட்பட அனைத்துத் துறைகளுக்கும் எனது வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### விளையாட்டு வீரர்கள்

கிராமப்புறங்களில் இருந்து நிறைய விளையாட்டு வீரர்கள் வர வேண்டும் என்பதற்காகத்தான் `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டம் துவங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாகப் பல்வேறு மாவட்டங்களில் கொடுத்து இருக்கிறோம். இன்றைக்கு ராணிப்பேட்டை மாவட்டத்தில், இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, இந்த ஸ்போர்ட்ஸ் கிட்டைக் கொடுக்கிறோம்.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் இருந்து நிறைய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உருவாகி வருகிறார்கள். இந்த மாவட்டத்தைச் சேர்ந்த டேபிள் டென்னிஸ் வீராங்கனை தங்கை யாஷினி, இங்கு வருகை தந்துள்ளார். `ஏசியன் ஜூனியர் அட் கேரட் சாம்பியன்சிப்’, `ஆல் இந்தியா இன்டர் இன்ஸ்ட்டிட்யூஸனல் சாம்பியன் சிப்’, `ஆல் இந்தியா இன்டர் யுனிவர்சிட்டி’, `கேலோ யுனிவர்சிட்டி கேம்ஸ்’ இப்படிப் பல சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று, இதுவரை 47 பதக்கங்களை வென்றுள்ளார்.

### பெருமை சேர்த்த தங்கை

தனது வெற்றிகளின் வாயிலாகத் தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்த தங்கை யாஷினியின் வெற்றிப்பயணம் தொடர, நாம் அனைவரும் சேர்ந்து அவரை வாழ்த்துவோம். அவர்களின் பெற்றோர்கள், அவர்களின் பயிற்சியாளர்களையும் வாழ்த்துவோம்.

இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பளுத்தூக்கும் வீரர் தம்பி அஜித் வந்து தந்திருக்கிறார்.

சீனியர் காமன்வெல்த் சாம்பியன் சிப் 2023இல் தங்கப் பதக்கம், 7 முறை நேஷனல் சாம்பியன் பட்டம் என இந்த ராணிப்பேட்டை மாவட்டத்திற்குப் பெருமையாக உயர்ந்து நிற்கும் தம்பி அஜித் அவர்களுக்கும் நாம் அனைவரும் சேர்ந்து நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம். அதேபோல், அவரின் பெற்றோருக்கும், பயிற்சியாளருக்கும் நம் வாழ்த்துகளைத் தெரிவிப்போம்.

### அரசு வேலை தருவோம்

விளையாட்டில் சாதிப்பவர்களுக்குத் தமிழ்நாடு அரசு உயரிய ஊக்கத்தொகையைத் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் வாயிலாக, நிதி உதவியைக் கொடுக்கிறோம். அதுமட்டுமல்ல, அரசுப் பணியில் மூன்று சதவிகித இட ஒதுக்கீடு என இந்த முறை சட்டமன்றத்தில் அறிவித்து இருக்கிறோம். குறைந்தது 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை தருவோம் என்று வாக்குறுதி கொடுத்து இருக்கிறோம். விரைவில், முதலமைச்சரின் கைகளாலே 100 வேலை வாய்ப்புகளையும் உறுதி செய்வோம்.

இப்படி நம் அரசு எடுக்கின்ற பல்வேறு முயற்சிகளுக்கு, இந்தியாவின் பல்வேறு இடங்களில் இருந்தும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன. சென்ற வாரம் கூட, புதுடெல்லியில் ஒரு நிகழ்ச்சி. ஃபிக்கி இந்தியா ஸ்போர்ட்ஸ் அவார்டு 2024இல் (FICCI India Sports Award2024) தமிழ்நாட்டிற்கு ஒரு விருது கொடுத்து இருக்கிறார்கள். என்ன விருது என்று பார்த்தீர்கள் என்றால், `தி பெஸ்ட் ஸ்டேட் ஆஃப் ப்ரோமோட்டிங் ஸ்போர்ட்ஸ்’ என்று விளையாட்டை ஊக்குவிக்கின்ற சிறந்த மாநிலம் என்று தமிழ்நாட்டிற்கு அந்த உயரிய விருது கொடுக்கப்பட்டு இருக்கிறது.

கடந்த வருடம் பிரபலமான பத்திரிக்கை `தி இந்து ஸ்போர்ட்ஸ் ஸ்டார்’ மற்றும் சி.ஐ.எஸ். ஸ்போர்ட்ஸ் என்ற அமைப்பும் தமிழ்நாட்டிற்கு `விளையாட்டை ஊக்குவிக்கின்ற சிறந்த மாநிலம்’ என்ற விருது வழங்கியது. படிக்காமல் சாதித்த ஒருவரை யாராவது எடுத்துக்காட்டாகக் கூறினால், அதற்கு இணையாகப் படித்துச் சாதித்த லட்சம் பேரைக் காட்டுகிறேன் என்று தமிழ்நாட்டில் கல்வியை முன் நிறுத்துகிறது, நம் திராவிட மாடல் அரசு.

### கலைஞர் போட்ட விதை

உங்களின் பிள்ளைகளை, காலையில் உணவு கொடுத்து வகுப்பறைக்கு அனுப்புவது நம் திராவிட மாடல் அரசு. புதுமைப்பெண் என்ற திட்டத்தின் வாயிலாக மாணவிகள் அரசு பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்கக் கல்லூரிக்கு சென்றால் மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத் தொகை வழங்குகிறது நம் திராவிட அரசு. இந்த மாதிரியான திட்டங்கள் தான் நம் திராவிட மாடல் அரசின் தனித்தன்மை. யார், யாருக்கு என்னென்ன தேவை என்று பார்த்து அதை நம் முதலமைச்சர் அவர்கள் செய்துகொண்டு வருகிறார்கள். அப்படியொரு வரலாறுதான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்றைக்குப்போட்ட விதை.

தமிழ்நாட்டுப் பெண்கள் நீங்கள், பொருளாதாரத்திற்கு வேறு யாரையும் சார்ந்து இருக்கக்கூடாது என்று உங்களுக்காக உருவாக்கப்பட்டது தான் மகளிர் சுயஉதவிக் குழுக்கள். இங்கு இருக்கும் எல்லோரும் தலை நிமிர்ந்தும், உங்களைச் சுயமரி யாதையோடும் வாழ வைத்துள்ள மண் நம் தமிழ்நாட்டு மண்.

### பெரியார் கண்ட கனவு

பெரியார் கண்ட கனவை கலைஞர் சாத்தியப்படுத்தினார். இதுவரை நம் திராவிட மாடல் அரசு அமைந்தது முதல் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 92 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குக் கடன் தொகை வழங்கப்பட்டு இருக்கிறது.

லட்சக்கணக்கான மகளிரின் வாழ்க்கைத் தரத்தை நம் திராவிட மாடல் அரசு உயர்த்தி இருக்கிறது.

இன்றைக்கு அரணாக, பாதுகாப்பாக, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார். என்றைக்கும் அவர் இருப்பார். இன்றைக்கு உங்களின் சுயமரியாதையை மேலும் அதிகரிக்கும் விதமாகத்தான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தைத் தருகிறது நம் திராவிட மாடல் அரசு.

மகளிர் நீங்கள் உயர்ந்தால்தான் ஒட்டுமொத்த சமூதாயமே உயரும். அந்த நோக்கில்தான் இன்றைக்கு 3 ஆயிரம் மகளிருக்கு 30 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிகடன் இணைப்பைக் கொடுக்க இருக்கிறோம்.

இந்தக் கடன் இணைப்பின் வாயிலாக மகளிர் நீங்கள் வாழ்க்கையில் மேல்மேலும் உயர வேண்டும் என்று வாழ்த்துகிறேன். அதற்கு என்றைக்கும் உங்களின் வீட்டுப் பிள்ளையாகத் துணை நிற்பேன்.

### சஜித்தின் மகிழ்ச்சிப் புன்னகை

இங்கு நிறைய மாற்றுத் திறனாளிகள் வந்து இருக்கிறீர்கள். ஒரேயொரு சம்பவத்தை மட்டும் இங்கு நினைவு கூற விரும்புகிறேன். நம் ஆட்சி அமைந்து ஒருநாள் தலைமைச் செயலகத்தில், `உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ என்ற திட்டத்தின் மூலம் பல கோரிக்கைகள் அளித்தவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளைக் கொடுத்துக் கொண்டு இருந்தார். அப்போது சென்னை, தரமணியைச் சேர்ந்த எலக்ட்ரீசியன் சத்திவேலும், அவரின் மனைவி தனலட்சுமியும், அவர்களின் மகன் சஜித்தையும் அழைத்து வந்திருந்தார்கள். அப்போது சஜித் 4வது படித்துக்கொண்டு இருந்தார்.

பிறவியிலேயே செவித்திறன் மாற்றுத் திறனாளியான சஜித்தின் காதில் நம் முதலமைச்சர் அவர்கள் அந்தக் கருவியை மாட்டிவிட்டார். அந்தக் கருவியை மாட்டியவுடன் சத்தத்தை முதன்முறையாகக் கேட்ட சஜித் மகிழ்ச்சியில் நம் முதலமைச்சரைப் பார்த்துத் தன்னை மறந்து சிரித்தார். அந்தச் சிரிப்புதான் நம் திராவிட மாடல் அரசின் வெற்றி. சஜித் இன்றைக்கு 7வது படித்துக்கொண்டு இருக்கிறார்.

இந்த மாதிரி நூற்றுக்கணக்கான மாற்றுத்திறனாளிகளுக்கு மகிழ்ச்சியையும், மன நிறைவையும் நம் திராவிட மாடல் அரசு தந்துக்கொண்டு இருக்கிறது. இன்றைக்கு ராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம், செயற்கைக்கால் போன்ற உதவிகளையும் நாம் இங்கு வழங்கி இருக்கிறோம்.

### சாமானியரின் கோரிக்கை

இதையெல்லாம், அரசின் கடமையாகக் கருதி நேரடியாக உங்களைத் தேடி வந்து உங்களின் கைகளில் சேர்க்கிறோம். அதுமட்டுமில்லாமல், ஒவ்வொரு சாமானியரின் கோரிக்கையும் அரசிற்கு முக்கியம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், நானும் தமிழ்நாட்டின் எந்தப் பகுதிக்கு போனாலும் மாற்றுத்திறனாளி சகோதர, சகோதரிகளுக்கு நலத்திட்ட உதவிகளைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டு இருக்கிறோம்.

இங்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்ட ஆணைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

வீடு எவ்வளவு முக்கியமோ, அதே அளவிற்கு வீட்டுமனையின் பட்டாவும் மிக முக்கியம். அதனால், இன்றைக்கு இந்த மேடையிலேயே 700 பேருக்கு வீட்டுமனைப் பட்டாவைக் கொடுக்க இருக்கிறோம். அதைப்பெற வந்துள்ள அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட மாடல் என்றால் என்ன என்று சிலப்பேர் கேட்கிறார்கள். இப்போது சொல்கிறேன். ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்பதுதான் திராவிட மாடல் அரசு.

ஆட்சிக்கு வந்தவுடன் நம் தலைவர் போட்ட முதல் கையெழுத்தே மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம். இந்த மூன்றரை வருடத்தில் மட்டும் கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்தின் வாயிலாக 580 கோடி பயணங்களைப் பெண்கள் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

ஒவ்வொரு மகளிரும் அந்தத் திட்டத்தின் மூலம் மாதம் 900லிருந்து 1,000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

இன்றைக்கு இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையில் இன்னொரு திட்டம் என்றால், அது கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம்தான். இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே பதினாறு லட்சம் மகளிர் மாதம் ஆயிரம் ரூபாய்ப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். இப்படி மகளிர் நீங்கள் வளர்ந்தால் மாநிலம் உயரும் என்றுதான் இந்தத் திட்டங்களை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் தீட்டி வழங்கி வருகிறார்.

இந்த மேடையில் கூடச் சுயஉதவிக்குழுக்களுக்குக் கடன் இணைப்புகள் வழங்கப்பட இருக்கின்றன. அதனை நம் முதலமைச்சர் அவர்கள், மகளிருக்கு அளிக்கின்ற கடன் தொகையாக அவர் பார்க்கவில்லை. உங்களின் உழைப்பின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கை தொகையாகத் தான் நம் முதலமைச்சர் அவர்கள் பார்க்கிறார்.

மகளிரின் வெற்றியே இந்த அரசின் இலட்சியம். திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரை எப்போதுமே மக்களோடு மக்களாகக் கைகோர்த்து நிற்கின்ற அரசு. நம் முதலமைச்சர் அவர்கள் உங்களின் குடும்பத்தில் ஒருவராக என்றும் உங்களுக்குத் துணை நிற்பார்.

இங்கு வந்திருந்த அத்தனைப்பேருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இவ்விழாவில் அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரப்பன், முனி ரத்தினம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி, மாவட்ட ஆட்சியர் சந்திரகலா, சர்வதேச டேபிள் டென்னிஸ் வீராங்கனை யாஷினி, தேசிய பளு தூக்கும் வீரர் அஜித், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் ஜெயந்தி திருமூர்த்தி, நகர் மன்றத் தலைவர் சுஜாதா வினோஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சுரேஷ் மற்றும் அரசு அதிகாரிகள், அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பயனாளிகள் உட்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.